# முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## A.S.No.09/2024

| | | |
|---|---|---|
| மேல்முறையீட்டாளர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | ஜெகதீசன் |
| தகப்பனார் / கணவர் | .. | அண்ணாமலை |
| வயது | .. | 52 |
| தொழில் | .. | ஓட்டுநர் |
| கிராமம் | .. | செங்காடு |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

நான் 8 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இவ்வழக்கில் இரண்டு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1948 ஆம் ஆவணம் என் பெரியப்பா ஜெயராமன் என்பவர் சடையப்ப முதலியார், ஜெகதா மற்றும் அண்ணாமலை ஆகியோருக்கு எழுதிக் கொடுத்த ஆவணம். 1948 பத்திரத்தில் எத்தனை சொத்து விவரம் சொல்லப்பட்டுள்ளது தெரியுமா என்றால் சுமார் 6 ஏக்கர் இருக்கும். மேற்படி 6 ஏக்கர் குறித்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மூன்று சர்வே எண்களுக்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2010 ஆம் ஆவணம் ஜெகதீசன் ஆகிய எனக்கு எனது அண்ணன் கமலகண்ணன் மற்றும் தம்பி கஜேந்திரன் விற்பனை எழுதிக் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி விற்பனை பத்திரத்திற்கு கோதண்டம் என்பவரும் பெயர் தெரியாத முனுசாமி மகன் என்பவரும் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். 2010 ஆம் ஆண்டு 2 சர்வே

எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் 192/4 மற்றும் 177/18 ஆகிய சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு சர்வே எண்கள் தவிர மற்றொரு ஒரு சர்வே எண்.179/13/14 ஆகிய மூன்றும் தான் தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை சகோதரிகள் கிரைய ஆவணமாக எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தற்போது நான் யாருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் என் தாத்தா சக்திவேல், ராஜகுமாரன் ஆகியோர் எதிராக தாக்கல் செய்துள்ளேன், மேற்படி நபர்கள் சங்கரிக்கு மாமனார். இந்த 2010 ஆம் ஆவணம் தொடர்பாக மட்டும் தான் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள 1948 பத்திரம் சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்னர் பத்திர பதிவு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டது. 2010 ஆம் ஆவணம் எழுதப்பட்ட நாளில் இருந்து என்னிடம் தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள இரண்டு ஆவணங்களும் வழக்கிற்கு பொருந்தாததாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**